**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.4** |
| **Name** | **:** | திரு. மோகனவேல் |
| **Father's Name** | **:** | திரு. ஏகாம்பரம் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

எதிரிகள் 1 முதல் 10 ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.06.2023.**

முதல் விசாரணை -

நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 சுசீலாவை எனக்கு தெரியும். அவருடைய மகன் சுரேஷ் தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுரேஷ் இறந்துபோனது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். தேதி ஞாபகம் இல்லை. ஜனவரி 2017ஆம் இரவு சுமார் 9 மணிக்கு வீட்டிடம் சண்டை நடந்தது. ஆஜர் எதிரிகளுக்கும் சுசீலா வீட்டிற்கும் சண்டை நடந்தது. இறந்துபோன சுரேஷ் காவல்நிலையத்திற்கு புகார் கொடுப்பதற்காக சென்றார். சுரேஷ் அம்மா சுசீலா சிவா ஆகியோர் முன்னால் சென்றார்கள். அதற்கு பின்னால் நான், வடிவேல், விஜயமணி, உமேஷ் ஆகியோர் சென்றோம். சுசீலா அம்மா என்னிடம் வந்து 8 மணிக்கு சொன்னார். நாங்கள் போகும்போது ஞானவேல், குமரவேல், தனசேகர் மற்றும் இங்கு இருக்கும் ஆஜர் எதிரிகள் அனைவரும் அங்கு இருந்தார்கள். உமேஷ் என்பவர் 108-க்கு தகவல் சொன்னார். சுரேஷிற்கு வலது

பக்க கழுத்தில் அடிப்பட்டிருந்தது. இரவு 9 மணி அளவில் இருப்பதால் ஆள்நடமாட்டம் இருந்ததா என்றால் நடமாட்டம் குறைந்த பகுதி.

நான் மருத்துவமனைக்கு சென்றேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தாரா என்றால் விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

எங்கள் வீட்டில் இருந்து சுசீலா வீடு எவ்வளவு தூரம் என்றால் பக்கத்து வீடு. எங்கள் ஊரில் மக்கள் தொகை எவ்வளவு என்றால் 1000 பேர். எத்தனை தெருக்கள் உள்ளது என்றால் 3 தெருக்கள் உள்ளது. நான் இருப்பது ரோடு தெரு. சுசீலா அம்மாள் இருப்பதும் ரோடு தெரு.

சுசீலா அம்மாளுக்கு ஒரு நபர் அடிப்பட்டு கிடக்கிறார் என்று தகவல் சொல்லி தான் நாங்கள் சென்றோம் என்றால் சரி தான். எங்கள் ஊரில் உள்ள வீடுகளில் அடிப்பட்டு கிடக்கும் இடத்திற்கு இடையில் உள்ள தூரத்தில் கடைசி வீடு யாருடைய வீடு என்றால் கோபால் வீடு. கோபால் வீட்டில் இருந்து அடிப்பட்டு கிடந்த இடம் ஒன்றரை கிலோமீட்டர் இருக்கும் என்றால் ஒரு கிலோமீட்டர் இருக்கும்.

இடையில் வீடுகள் உள்ளதா என்றால் இல்லை. மருத்துவமனையில் நான் இருந்தேனா என்றால் இருந்தேன். நான் எவ்வளவு நேரம் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் பிரேதம் சென்ற பிறகு பின்னால் சென்று பிரேதம் கொடுக்கும் வரை அங்கு தான் இருந்தேன். மருத்துவமனையில் இருந்தபோது தூசி போலிசார் அப்போதே வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அப்போதே போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரி தான். சுசீலா, ஜெயபால், என்னிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரி

தான்.

என்னுடன் யார் வந்தது என்றால் நான் தனியாக இருசக்கர வாகனத்தில் சென்றேன். நான் போய் பார்க்கும்போது சுரேஷின் இருசக்கர வாகனம் கீழே கிடந்தது என்றால் சரி தான். சுரேஷ் விழுந்து கிடந்த இடம் முள்கள் இருந்தது என்றால் செடி தான் இருந்தது. ரோட்டின் மேல் இருந்தார். ரோட்டின் மேல் செடி இருந்ததா என்றால் ரோட்டிற்கு தள்ளி தான் செடி இருந்தது.

போலிசார் மருத்துவமனையில் என்னை விசாரித்த பிறகு பின்னிட்டு விசாரிக்கவில்லை என்றால் மறுநாள் காலையில் வந்தார்கள். மறுநாள் காலையில் சுசீலாவை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று புகார் கொடுத்தேன். எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றேன் என்றால் காலை 7 மணி இருக்கும். காவல்நிலையத்திற்கு நாங்கள் செல்லும்போதே நாகப்பன், ஷீலா, தீபா ஆகியோர் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரி தான்.

தகவல் கிடைத்து தான் நாங்கள் ஊரில் உள்ளவர்களும் போய் பார்த்தோம் என்றாலும், நாங்கள் பார்க்கும்போதே அடிப்பட்ட சுரேசை ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள் என்றாலும், நான் சொல்வதுபோல் உமேஷ் ஆம்புலன்சிற்கு போன் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.